# சமூக விழிப்புணர்வு பயிலரங்கம்

சமூக அக்கறை என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்க வேண்டிய ஒரு உணர்வு. ஆனால் இன்று அது எத்தனை பேருக்குள் இருக்கிறது என்பதுதான் கேள்வி. சமூகத்தில் மாற்றத்தை உண்டாக்கவும் சமூக அங்கத்தினர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் சரியானவர்கள், தகுதியானவர்கள் வளரும் இளம் தலைமுறையினரே. இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் செயல்பட்டு வருவது நமது டி.வி.எஸ் அகாடமி. ஒசூர் விஜய் வித்யாலயா பள்ளியில் 10.08.2011 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களின் முன்னிலையில் கிருஷ்ணகிரி அரசு கல்வித் துறையும் டைட்டான் இண்டஸ்டிரியும் இணைந்து தேசியப் பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கத்தினை நடத்தின. இப்பயிலரங்கத்தில் கலந்துகொண்ட ஆசிரியப் பெருமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அவர்கள் முன்னிலையில் நம் பள்ளி மாணவர்கள் பல்கிப் பெருகி வரும் பிளாஸ்டிக்கால் ஏற்படும் விளைவுகளையும், அதனால் வரக்கூடிய ஆபத்துக்களையும் பற்றி **“பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்”** என்னும் பொம்மலாட்டத்தை நடத்திக் காட்டினர். பயிலரங்கில் கலந்துகொண்ட ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் ஒருமித்த குரலில் தங்களை இந்நிகழ்ச்சி சிந்திக்க வைத்துவிட்டது என்று கூறியபோது பசுமையான தூய்மையான ஒசூரை நோக்கிய நம்முடைய இலட்சியம் நிறைவேறும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற நம்பிக்கை துளிர்விட்டது,

